000523
520/2023

சுருக்கம்

பொதுப்பணிகள் தமிழ்நாடு அமைச்சுப்பணி - கருணை அடிப்படை பணிநியமனம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை - திருச்சிராப்பள்ளி மாவட்டம் - பணியில் இருக்கும் போது காலமான ஊராட்சி செயலர் திரு.மா.ஆறுமுகம் என்பவரின் மகன் திரு.ஆ.ரஞ்சித் இளநிலை உ தவியாளர் பதவியில் பணி நியமனம் - பணிவரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-5) துறை**

**அரசாணை (4ப) எண்.52**

**நாள் 18.11.2022.**
**சுபகிருது, கார்த்திகை 2.**
**திருவள்ளுவர் ஆண்டு 2053.**

**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.18 தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் (க்யூ.1) துறை, நாள் 23.01.2020.
2. திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் செயல்முறை எண்.தா4/2728/2018-3, நாள் 05.03.2020.
3. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடிதம் ந.க.எண்.33662/2020/டி2, நாள் 22.09.2020 மற்றும் 03.08.2021.

*****

**ஆணை:**

பணியில் இருக்கும்போது காலமான அரசுப் பணியாளர்களின் வாரிசுகளுக்குக் கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்கலாம் என்பதன் அடிப்படையில், திருச்சிராப்பள்ளி மாவட்டம், உப்பிலியபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிறுநாவலூர் ஊராட்சி செயலராகப் பணிபுரிந்து 03.01.2018 அன்று பணியிடைக் காலமான திரு.மா.ஆறுமுகம் என்பவரின் மகன் திரு.ஆ.ரஞ்சித் என்பவருக்கு மேலே

..2

இரண்டாவதாகப் படிக்கப்பட்ட செயல்முறையின்படி கருணை அடிப்படையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இளநிலை உதவியாளராக தற்காலிகமாகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, அத்தனியர் 11.03.2020 முற்பகல் முதல் பணியேற்று பணிபுரிந்து வருவதால், அன்னாரின் பணியை வரன்முறை செய்து ஆணையிடும்படி ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மறைந்த ஊராட்சி செயலர் பணிவரன்முறை செய்யப்பட்ட பணியாளர் என்றும், அவரது குடும்பம் வறிய நிலையில் உள்ளது என்றும், அவரது மகன் திரு.ஆ.ரஞ்சித் கருணை அடிப்படையில் பணி நியமனம் கோரி 21.03.2018 அன்று விண்ணப்பித்தார் என்றும், அவரது பிறந்த தேதி 03.12.1999 என்றும், ஊராட்சி செயலர் இறந்த நாளில் தனியரின் வயது 18 என்றும், பணிநியமனம் கோரி விண்ணப்பித்த நாளில் தனியரின் வயது 18 என்றும், பணி நியமன நாளில் தனியரின் வயது 20 என்றும், அவர் இடைநிலைக் கல்வி பள்ளியிறுதி வகுப்புப் பொதுத் தேர்வில் தேர்ச்சி பெற்றுள்ளார் என்றும், அவருக்குப் பணி நியமனம் வழங்குவதற்கு இதர வாரிசுதாரர்கள் ஆட்சேபணை ஏதும் தெரிவிக்கவில்லை என்றும் தெரிவித்து, மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு முன்மொழிவு அனுப்பியுள்ளார்.

3. அரசாணை (நிலை) எண்.100, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எம்) துறை, நாள் 01.08.2018-ல் கருணை அடிப்படையில் பணி நியமனம் செய்யப்பட்ட பணியாளர்களின் பணி வரன்முறை குறித்து, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் இசைவினைப் பெறும் நடைமுறை கைவிடப்பட்டுள்ளது.

4. இந்நிலையில், மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் முன்மொழிவு உரிய அசல் ஆவணங்களுடன் அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குப்பின், பார்வை ஒன்றில் உள்ள அரசாணையில், வழங்கப்பட்டுள்ள வழிகாட்டுதல்களின்படி, கருணை அடிப்படையில் பணிநியமனம் வழங்கும் திட்டத்தில், இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ஆ.ரஞ்சித் என்பவர் பணி நியமனத்திற்கான அனைத்துத் தகுதிகளையும் பெற்றுள்ளதால், தமிழ்நாடு அமைச்சுப் பணியில்,

..3

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஊரக வளர்ச்சி அலகில் இளநிலை உதவியாளர் பதவியில் 11.03.2020 முற்பகல் முதல் அவர் அப்பணியிடத்திற்குரிய உடற் தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் தனியரின் பணியினை வரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் 05.11.2020 ஆம் நாளிட்ட அலுவல் சாரா எண்.17048/ட்டி.1/2020 மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறையின் அலுவல் சாரா எண்.28933/ஜி1/2020-1, நாள் 07.11.2020-ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பெ.அமுதா,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி ஆணையர், சென்னை-15.
மாவட்ட ஆட்சித் தலைவர், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை 18/35.
கருவூல மற்றும் கணக்குத் துறை ஆணையர், சென்னை-15
மாவட்ட கருவூல கணக்கு அலுவலர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

நகல்:
திரு.ஆ.ரஞ்சித், இளநிலை உதவியாளர்,
ஊரக வளர்ச்சிப் பிரிவு, திருச்சிராப்பள்ளி மாவட்டம்.
(வழி: திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர்)
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9.
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உதிரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.